# வாழ்த்துக்கள்



## திரு. N.R. பழனிகுமார்

தாத்தா : புரசைப்பெரியவர் **N.C. கிரிபால் முதலியார்**

தகப்பனார் : **N.G. ராமகிருஷ்ணன்**

கிரி என்றாலும் மலை பழனி என்றாலும் நம் நினைவிற்கு வருவது மலைதானே !

பெயரிலேயே தாத்தாவிற்கும் பேரனுக்கும் என்னபொருத்தம்! அவரைப்போலவே அறிவும் அன்பும் அனுபவமும் பெற்று இனிய சுவையான கனிகளாக மெய்மறக்கும் தென்றலாக தன் கவிதையில் வலம் வந்து, கதிரவன் காலைப்பொழுதில் கார் இருளை கிழிப்பதுபோல் சமூக அவலங்களை “இலக்கை அடையும் முன் இளைப்பாரக் கூடாது” என்னும் லட்சியத்தோடு தன்னம்பிக்கை சுடராய் தொடர்ந்து வரிசையாய் படைத்திட்ட கவிதைகள் பாரதியையும் பாரசக்தியையும் பட்டுக்கோட்டையாரையும் நினைவுகூர்கின்றன “உன்னால் முடியும் தம்பி” என்று ஜாம்பவான் அனுமனுக்கு இராமகாவியத்திலே சொன்னான் இவருக்கு அப்படியார் சொன்னது? எல்லாம் அவரின் உள்ளக்குமுறல்கள், உணர்வுகளின் வெளிப்பாடு. நாம் மட்டும் தெரிந்து கொண்டால் போதுமா? உலகம் தெரிந்து கொள்ள வேண்டாமா? எனவே தான் கவிவிசை மின்நூலில் கவிதையினைபடைத்தார் வலைதள உலக சாதனைக்காக கவிவிசை மின்நூலில் படைத்த கவிதைகள் கவிஞர் திரு.N.R.பழனிகுமார் அவர்களின் தமிழ் உணர்வு, கவி இயற்றும் திறன் ஆகியவற்றால் சிறந்த கவிதைகளாய் வெளிப்பட்டன அவற்றை வியந்து பாராட்டி சிறந்த கவிஞராக “**சென்னை தமிழ் கவிஞர் கலை இலக்கிய சங்கம்**” 16-06-2013 அன்று சென்னையில் நடத்திய விழாவில் முன்னால் “**துணைவேந்தர் திருமிகு.க.பா. அறவாணன்**” அவர்களால் “**கவிமுரசு பட்டயம்**” வழங்கப்பட்டது, அதற்கு நன்றி தெரிவிப்பதோடு திரு.N.R.பழனி குமார் அவர்களை அவரின் நண்பர்கள் உற்றார் உறவினர்கள் சார்பில் எங்கள் இதயபூர்வமான வாழ்த்துகளையும் பாராட்டுகளையும் தெரிவித்துக் கொள்கிறோம். அவர் மென்மேலும் பல கவிதைகளை படைத்து பலவிருதுகள் வாங்கிடவும் அனைவர் சார்பில் வாழ்த்துவதில் பெருமகிழ்ச்சி அடைகிறோம்.

**மீஞ்சூர் P.N. முருகேசன் & P.T. குணாளன்**

அயனாவரம், சென்னை - 600 023.